# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***S. C. NO. 520/2025***

Deposition of Witness for Prosecution :: **P.W.1**

| | | |
|---|---|---|
| பெயர் | – | பொன்னப்பன் |
| தந்தை பெயர் | – | சாமியா தேவர் |
| கிராமம் | – | கோடகநல்லூர் |
| தாலுகா | – | திருநெல்வேலி |
| தொழில் | – | விவசாயம் |
| வயது | – | 72 |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tmt.S.Nageswari in accordance with the Provisions of Act X of 1873 on **the 22nd day of July 2026.**

(Accused present. )

(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் கோடகநல்லூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். எனக்கு சம்பவம் பற்றி எதுவும் தெரியாது. சுத்தமல்லி போலிசார் என்னிடம் ஒரு நாள் கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டேன். ஒரு இடம் விசயமாக போயிருந்தேன். அப்போது கையெழுத்து கேட்டார்கள். கையெழுத்து போட்டேன். என்னிடம் காட்டப்படும் புகாரில் இருப்பது என் கையெழுத்து தான். நான் கையெழுத்து போடும்போது அது வெள்ளை பேப்பராக தான் இருந்தது. அதில் வாசகம் எதுவும் இல்லை. அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.1. ஆஜர் எதிரி எனது மகன் தான். போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி அவரைக் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், விசாரணையின் போது 31.08.2024 ம் தேதி மதியம் 3 மணி அளவில் நான் என் வீட்டின் முன்பு நின்று கொண்டிருக்கும்போது அங்கு வந்த ஆஜர் எதிரி எனது மகன் பாண்டி என்ற அந்தோணி பாண்டி வழக்கம்போல் பிராந்தி குடிக்க பணம் கேட்டான் என்றும், நான் என்னிடம் பணம் இல்லை என கூறினேன் என்றும், அதற்கு பாண்டி என்ற அந்தோணி பாண்டி என்னை பார்த்து தேவிடியா மவனே நான் பணம் கேட்டா தரமாட்டியா என்று அசிங்கமாக பேசிக் கொண்டு எனது வீட்டிற்குள் சென்று அருவாளை எடுத்து வந்து இத்தோடு சாவுல கூதிமவனே என்று அவன் கையில் வைத்திருந்த அருவாளால் எனது கழுத்தை நோக்கி ஓங்கி வெட்ட வந்தபோது நான் சுதாரித்து எனது மகன் கையை தட்டிவிட்டு விலகி கொண்டேன் என்றும், நான் மட்டும் சுதாரித்து விலகாமல் இருந்திருந்தால் எனது மகன் அருவாளால் வெட்டிய வெட்டு என் கழுத்தில் பட்டு இறந்திருப்பேன் என்றும், நான் பயத்தில் சத்தம் போடவும், சம்பவத்தை நேரில் பார்த்த அங்கு நின்ற எனது மனைவி முத்துலெட்சுமியும், எங்கள் தெருவில் நின்று கொண்டிருந்த ஆறுமுகம் மகன் மாரியப்பனும் ஓடி வந்து சத்தம் போடவும், எனது மகன் கையில் வைத்திருந்த அருவாளை காட்டி என்னை பார்த்து இன்னைக்கு ஆட்கள் வரப்போய் நீ தப்பிச்சிட்ட, என்னைக்குனாலும்

Uploaded on 22.07.2026

உன்னை வெட்டிக் கொல்லாம விட மாட்டேன் என்று கொலை மிரட்டல் செய்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான் என்றும், நான் 31.08.2024ம் தேதி மாலை 4 மணிக்கு சுத்தமல்லி காவல்நிலையம் வந்து எனது மகன் பாண்டி என்ற அந்தோணிபாண்டி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு கொடுத்தேன் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது ஆஜர் எதிரி எனது மகன் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Uploaded on 22.07.2026

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***S. C. NO. 520/2025***

Deposition of Witness for Prosecution :: **P.W.2**

| | | |
|---|---|---|
| பெயர் | – | முத்துலெட்சுமி |
| கணவர் பெயர் | – | பொன்னப்பன் |
| கிராமம் | – | கோடகநல்லூர் |
| தாலுகா | – | திருநெல்வேலி |
| தொழில் | – | விவசாயம் |
| வயது | – | 65 |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tmt.S.Nageswari in accordance with the Provisions of Act X of 1873 on **the 22nd day of July 2026.**

(Accused present. )
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் கோடகநல்லூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். அ.சா.1 எனது கணவர். ஆஜர் எதிரி எனது மகன். சம்பவம் எதுவும் நடக்கவில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி அவரைக் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், விசாரணையின் போது 31.08.2024 ம் தேதி மதியம் 3 மணி அளவில் எனது கணவர் எங்கள்

வீட்டின் முன்பு நின்று கொண்டிருக்கும்போது அங்கு வந்த ஆஜர் எதிரி எனது மகன் பாண்டி என்ற அந்தோணி பாண்டி வழக்கம்போல் எனது கணவரிடம் பிராந்தி குடிக்க பணம் கேட்டான் என்றும், எனது கணவர் தன்னிடம் பணம் இல்லை என கூறினார் என்றும், அதற்கு பாண்டி என்ற அந்தோணி பாண்டி என் கணவரைப் பார்த்து தேவிடியா மவனே நான் பணம் கேட்டா தரமாட்டியா என்று அசிங்கமாக பேசிக் கொண்டு எனது வீட்டிற்குள் சென்று அருவாளை எடுத்து வந்து இத்தோடு சாவுல கூதிமவனே என்று அவன் கையில் வைத்திருந்த அருவாளால் எனது கணவரின் கழுத்தை நோக்கி ஓங்கி வெட்ட வந்தபோது எனது கணவர் சுதாரித்து எனது மகன் கையை தட்டிவிட்டு விலகி கொண்டார் என்றும், எனது கணவர் மட்டும் சுதாரித்து விலகாமல் இருந்திருந்தால் எனது மகன் அருவாளால் வெட்டிய வெட்டு எனது கணவரின் கழுத்தில் பட்டு இறந்திருப்பார் என்றும், எனது கணவர் பயத்தில் சத்தம் போடவும், சம்பவத்தை நேரில் பார்த்த அங்கு நின்ற நானும், எங்கள் தெருவில் நின்று கொண்டிருந்த ஆறுமுகம் மகன் மாரியப்பனும் ஓடி வந்து சத்தம் போடவும், எனது மகன் கையில் வைத்திருந்த அருவாளை காட்டி என் கணவரைப் பார்த்து இன்னைக்கு ஆட்கள் வரப்போய் நீ தப்பிச்சிட்ட, என்னைக்குனாலும் உன்னை வெட்டிக் கொல்லாம விட மாட்டேன் என்று கொலை மிரட்டல் செய்துவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டான் என்றும், எனது கணவர் 31.08.2024 ம் தேதி மாலை 4 மணிக்கு சுத்தமல்லி காவல்நிலையம் வந்து எனது மகன் பாண்டி என்ற அந்தோணிபாண்டி மீது நடவடிக்கை எடுக்குமாறு புகார் மனு கொடுத்தார் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது ஆஜர் எதிரி எனது மகன்

Uploaded on 22.07.2026

என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

Uploaded on 22.07.2026

# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)

***IN THE COURT OF PRINCIPAL SESSIONS COURT, TIRUNELVELI.***

***S. C. NO. 520/2025***

Deposition of Witness for Prosecution :: **P.W.3**

| | | |
|---|---|---|
| பெயர் | – | சண்முகவேல் |
| தந்தை பெயர் | – | ஆவுடையப்பன் |
| கிராமம் | – | கோடகநல்லூர் |
| தாலுகா | – | திருநெல்வேலி |
| தொழில் | – | விவசாயம் |
| வயது | – | 45 |

Solemnly affirmed by Grade I Bench Clerk Tmt.S.Nageswari in accordance with the Provisions of Act X of 1873 on **the 22nd day of July 2026.**

(Accused present. )
(As per Hon'ble High Court, Madras R.O.C. No.65929-A/2022/F1 P.Dis. No.17/2023 dated 23.01.2023)

**முதல் விசாரணை**

நான் கோடகநல்லூரில் குடியிருந்து விவசாயம் செய்து வருகிறேன். ஆஜர் எதிரி எங்கள் ஊர் தான். இந்த வழக்கு சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் பார்வை மகசரில் உள்ள 2 வது கையெழுத்து என்னுடையது தான். காவல்நிலையம் சென்றபோது என்னிடம் ஒரு வெள்ளை பேப்பரில் கையெழுத்து வாங்கினார்கள். அந்த கையெழுத்து மட்டும் அ.சா.ஆ.2. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

(அரசு தரப்பு வழக்கறிஞர் கேட்டுக் கொண்டதற்கிணங்க சாட்சியை பிறழ் சாட்சியாகக் கருதி அவரைக் குறுக்கு விசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது.)

குறுக்கு விசாரணை (அரசு தரப்பில்)

என்னை போலிசார் விசாரித்தார்கள் என்றும், விசாரணையின் போது 31.08.2024 ம் தேதி மாலை சுமார் 5 மணி அளவில் நானும் அத்தாளநல்லூர் கோட்டை தெருவை சேர்ந்த முருகேசன் மகன் மணிகண்டன் என்பவரும் கோடகநல்லூர் கீழ அக்ரஹார தெருவில் நின்று கொண்டிருந்தபோது அங்கு வந்த சுத்தமல்லி காவல் நிலைய ஆய்வாளர் சுத்தமல்லி காவல்நிலைய குற்ற எண்.436/2024 சட்டப் பிரிவுகள் 296(பி), 109, 351(3) BNS வழக்கின் விவரம் சொல்லி சாட்சியாக இருக்க கேட்டதின் பேரில் நாங்கள் சம்மதித்து எங்கள் இருவர் முன்னிலையில் சம்பவ இடத்தையும் அதன் சுற்றுப்புறங்களையும் பார்வையிட்டு ஒரு மாதிரி வரைபடமும், பார்வை மகசரும் தயார் செய்தார் என்றும், அந்த பார்வை மகசரில் நாங்கள் இருவரும் கையெழுத்து செய்தோம் என்றும் சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தற்போது ஆஜர் எதிரி எனது ஊரைச் சேர்ந்தவர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரை இந்த வழக்கில் இருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>–

இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.